எஸ்.டி.சி.எண்.2527/22
PW 2
பெயர் வடிவேல்
தேதி 27.11.23
**( 1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**.)**
சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து **3**ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அன்றையதினம் யார் உத்தரவின் பேரில் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சார்பு ஆய்வாளர் உத்தரவின் பேரில் சென்றோம். ரோந்து பணிக்கு எந்த வழியாக சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் கிருஷ்ணா தியேட்டர் வழியாக சென்றோம். சம்பவம் நடந்த பகுதி ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அரசு மதுபான கடைக்கு அருகில் நிறைய கடைகளும் வீடுகள் உள்ளது என்றால் அதிகமான வீடுகள் அங்கு இல்லை. 1ம் எதிரியிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் சார்பு ஆய்வாளர் எழுதினார். அத்தாட்சி, பார்வைமகஜர் ஆகியவற்றை சார்பு ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் எழுதியபின்பு 1ம் எதிரியிடம் கையெப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். எதிரி சொல்ல சொல்ல சார்பு ஆய்வாளர் எழுதினார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அரசு மதுபான கடை நாங்கள் போகும் போது திறந்து இருந்ததா என்றால் சட்டர் பாதி அடைத்து இருந்தது. விற்பனை நடந்துக்கொண்டிருந்ததா என்றால் நடந்துக்கொண்டிருந்தது. ஆட்கள் வாங்கி கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் மது கடையில் எத்தனை பேர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் 2 நபர்கள் இருந்தார்கள். மேற்படி 2 நபர்களை சார்பு ஆய்வாளர் விசாரித்தார். நான் விசாரிக்கவில்லை. மது அதிகவிலைக்கு விற்றதற்கான பணம் எதையும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம்இ ல்லை. சம்பவம் சம்மந்தமாக தனிப்பட்ட சாட்சிகளை சார்பு ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் சார்பு ஆய்வாளர் அழைத்தார் யாரும்முன் வரவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் நடந்த காலம் கொரேனா காலம் என்பதாலும் அந்த சமயத்தில் கடை காலை 10 மணிமுதல் இரவு 8மணி வரை தான் கடை திறந்திருக்கும் என்றால் சரிதான். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெப்பம் பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. கொரேனா காலத்தில் புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதுஎன்றால் சரியல்ல. சொன் னதேதி நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனதுஉயர்அதிகாரியான சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றபட்ட மதுபான பாட்டில்களை காவல்நிலையத்திற்கு ஆட்டோவில் கொண்டு சென்றோம். சம்பவ இடத்தில் நாங்கள் 1 1/2 மணி நேரம் இருந்திருப்போம். சம்பவ இடத்தில் எந்த பொருளையும் கைப்பற்றபடவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் கையிருப்பில் இருந்த மதுபாட்டில்களை வைத்துஎதிரகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக அரசு மதுகடையில் விற்பனை செய்வதற்கு என்று விற்பனையாளர் உள்ளார் என்றால் சரிதான்.